பக்கங்கள்: 08 விலை : 20/-

# காலைக்கதிர்

Kālaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 வைகாசி 02 வெள்ளிக்கிழமை 15.05.2020 கதிர் 59

# சுமந்திரனின் பதில் வெளிப்படையானது மிக நேர்மையானது

## சம்பந்தன் சான்றிதழ்



கொழும்பு,மே15

பிரிக்கப்படாத, பிரிக்கமுடியாத ஒரே இலங்கைக்குள் தேசிய பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் காண்பதற்கான முயற்சிகளை முறியடிக்கும் உள்நோக்கத்தோடும் இந்த நாட்டு மக்கள் மத்தியில், அதிலும் குறிப்பாகத் தமிழ் மக்கள் மத்தியில் குழப்பத்தையும் ஒற்றுமையின்மையையும் எற்படுத்தும் நோக்கத்தோடும் கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பதில் சுமந்திரன் வெளிப்படையாகவும் நேர்மையாகவும் செயற்பட்டுள்ளார்.

2

## நாகர்கோவிலில் நினைவேந்தல்



யாழ்ப்பாணம், மே. 15

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் மூன்றாம் நாள் நினைவஞ்சலி நிகழ்வுகள் இன்று நாகர்கோவில் பகுதியில் இடம்பெற்றன.

2

## தனிமைப்படுத்தப்பட்டிருந்த சகல பகுதிகளும் விடுவிப்பு

கொழும்பு, மே. 15

கொரோனா வைரஸ் தொற்று அடையாளம் காணப்பட்ட பகுதிகளான கொழும்பு 12 பண்டாரநாயக்க மாவத்தை ,ஜா எல, சுதுவெல்ல பகுதிகள் தனிமைப்படுத்தல் பிரதேசங்களாக இனியும் இருக்கமாட்டாதென இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

3

## 32 பேர் குணமடைவு!

கொழும்பு, மே. 15

கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்கான மேலும் 32 பேர் பூரணமாகக் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர் எனச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் கொரோனா தொற்றில் இருந்து பூரணமாக குணமடைந்தவர்களின்

3

## மீண்டும் கொரோனா என்று யாரும் பீதியடையாதீர்கள்!

### யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் சத்தியமூர்த்தி கூறுகிறார்

யாழ்ப்பாணம், மே15

யாழ்ப்பாணத்தில் மீண்டும் கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதாக எவரும் பீதியடையத் தேவையில்லை என யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில், கொரோனா தொற்றுக்கு உள்ளாகி வெலிகந்தை சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை அளிக்கப்பட்டு குணமடைந்த நிலையில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தவர்கள் ஐவருக்கு நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் வைரஸ் கண்டறியப்பட்டதாக அறிக்கை வந்துள்ளது.

இந்நிலையில் இது குறித்து அவர் இன்று வெள்ளிக்கிழமை நடத்திய

2

## சுமந்திரன் தொடர்பில் சம்பந்தனுடன் பேச்சு!

### தனிப்பட அவரை விமர்சிக்கவில்லை என்கிறார் செல்வம் அடைக்கலநாதன்



வவுனியா, மே. 15

தனிப்பட்ட சுமந்திரனை நாம் விமர்சிக்கவில்லை. ஆயுதப்போராட்டம் தொடர்பாகச் சுமந்திரன் தெரிவித்த கருத்துக்களையே நாம் கண்டித்தோம். சுமந்திரனின் கருத் துக்களை நன்றாக விளங்கிக் கொண்டே கருத்துக்களைத்

3

## பொருளாதாரத்தை தூக்கி நிறுத்த பஸில் தலைமையில் விசேட குழு!

கொழும்பு, மே15

வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்காக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷ தலைமையில் விசேட செயலணி அமைக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷமன் யாப்பா அபேவர்தன இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் -

2

## 230 கோடி ரூபா பெறுமதியான ஹெரோயின் சிக்கியது!

கொழும்பு, மே. 15

வெலிசறைப்பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் 225 கிரோ கிராம் ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

அரிசி மூடைகளுக்குள் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் போதைப்பொருள் மீட்கப்பட்டது.

நான்கு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டமையுடன், இரண்டு கார்களும் மீட்கப்பட்டன.

கைப்பற்றப்பட்ட ஹெரோயினின் பெறுமதி 230 கோடி ரூபாவுக்கும் அதிகமென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## ராணுவத்தினர் சூடு; இளைஞர் படுகாயம்

### மந்திகையில் அதிகாலை சம்பவம்



யாழ்ப்பாணம், மே. 15

பருத்தித்துறை மந்திகைப் பகுதியில் இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான இளைஞன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இன்று அதிகாலை ஒரு மணியளவில் இந்தச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

2

## மே 18 ஒரு நேரம் கஞ்சி அருந்தி சுடரேற்றி அஞ்சலி செய்வோம்

### மக்களிடம் கூட்டமைப்பு வேண்டுகோள்

கொழும்பு, மே. 15

மே 18ஆம் திகதி தங்கள் வீடுகளில் மாலை 06.00 மணி தொடக்கம் 07.00 மணி வரையான கால இடைவெளியில் சுடரேற்றி அஞ்சலிக்குமாறும், எமது உறவுகள் போர் அவலங்களுக்கு மத்தியிலே உணவுக்கு வழியின்றி வெறும் கஞ்சியை மட்டும் அருந்தி உயிர்காத்த அந்தக் கொடுமையை நினைவு கூரும் முகமாக 18ஆம் திகதி ஒரு நேரம் கஞ்சியை அருந்துமாறும்,

2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## பொருளாதாரத்தை தூக்கி நிறுத்த ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

30 வருட கால சிவில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்த ராஜபக்ஷக்களுக்குப் பொருளாதாரத்தையும் முன்னேற்ற முடியும். கொரோனா வைரஸ் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டு நாடு வழமை நிலைக்கு திரும்புவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கொரோனா வைரஸை கட்டுப்படுத்த அரசு முன்னெடுத்த நடவடிக்கைகள் தொடர்ந்துதீவிரமாகச்செயற்படுத்தப்படும்.

நெருக்கடியான நிலையில் பொதுத் தேர்தலை நடத்த அரசு எந்நிலையிலும் குறிப்பிடவில்லை. வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை மேம்படுத்துவதே தற்போதைய பாரிய சவால்.

பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கு முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தலைமையில் செயலணி அமைக்கப்பட்டுள்ளது. இவ்வருடத்தின் இரண்டாம் காலாண்டில் பொருளாதார வளர்ச்சி வீத்த்தை 3 சதவீதமாக அதிகரிப்பதே பிரதான எதிர்பார்ப்பு - என்றார்.

## மே 18 ஒரு நேரம் கஞ்சி அருந்தி ......................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை அன்றைய தினம் இரவு 08.00 மணிக்கு எல்லா ஆலயங்கள் மற்றும் தேவாலயங்களிலும் ஒரு நிமிடம் அல்லது இரு நிமிட நேர மணி ஒலியை எழுப்பி அஞ்சலிக்குமாறும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் கி.துரைராசசிங்கம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

எதிர்வரும் 18ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தொடர்பில் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

முள்ளிவாய்க்கால் தினம் மே 18 இல் நாங்கள் வழமையாக மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆலயங்களில் பிரார்த்தனை, பூசை அதன் பின்னர் அன்னதானம் போன்ற நிகழ்வுகளுடன் இந்தத் தினத்தை அனுஷ்டித்து வருகின்றோம். இம்முறை கொரோனா வைரஸ் தொடர்பான சுகாதார நடைமுறைகளைப் பேண வேண்டியுள்ளது. எனவே நாமெல்லாம் ஓரிடத்தில் கூடி இந்த அஞ்சலி நிகழ்வைச் செய்ய முடியாத நிலையிலுள்ளோம்.

இந்நிலையில் ஒவ்வொருவரும் தங்கள் வீடுகளில் மாலை 06.00 மணி தொடக்கம் 07.00 மணி வரையான கால இடைவெளியில் சுடரேற்றி அஞ்சலிக்குமாறும், முள்ளிவாய்க்காலில் எமது உறவுகள் போர் அவலங்களுக்கு மத்தியிலே உணவுக்கு வழியின்றி வெறும் கஞ்சியை மட்டும் அருந்தி உயிர்காத்த அந்தக் கொடுமையை நினைவு கூறும் முகமாக 18ஆம் திகதி திங்கட்கிழமை ஏதாவது ஒரு நேர உணவாக அல்லது ஏனைய உணவுப் பண்டங்களில் கஞ்சியையும்அருந்திஇந்தவரலாற்றுநிகழ்வை பெரியோர்கள் நாம் கடைப்பிடிப்பதோடு, சிறார்களுக்கும் இந்த உணர்வை ஊட்டும் வகையில் ஒரு துக்க நாளாகவும், பிரார்த்தனை நாளாகவும் இத்தினத்தைக் கடைப்பிடிப்போம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அன்பர்கள் உங்கள் உங்கள் பிரதேசங்களில் இவ்விடயம் தற்போது கடைப்பிடிக்கவேண்டிய சுகாதார வழிமுறைகளைக் கடைப்பிடித்து நடைபெறுவதற்கு ஊக்கமளிக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள். இதேவேளை அன்றைய தினம் இரவு 08.00 மணிக்கு உங்கள் உங்கள் பகுதியில் உள்ள எல்லா ஆலயங்கள் மற்றும் தேவாலயங்களிலும் ஒரு நிமிட அல்லது இரு நிமிட நேர மணி ஒலியை எழுப்பி அஞ்சலிக்குமாறும் கேட்டுக் கொள்கின்றோம். இதனை வடக்கு கிழக்கிலுள்ள எல்லாத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிருவாகத்தினரும், கருதிற்கு கொண்டு வடக்கு கிழக்கு எங்கனும் இவ்விடயம் நடந்தேற உணர்வோடு சேர்ந்த உங்கள் அனைவரது ஒத்துழைப்பையும் நாடி நிற்கின்றோம் - என்றார்.

## நாகர்கோவிலில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நாகர் கோவில் மகா வித்தியாலயம் முன்பாக நடைபெற்றது.

1995ஆம் ஆண்டு 9ஆம் மாதம் 22ஆம் திகதி இலங்கை விமானப்படையின். குண்டுவீச்சுக்கு இலக்காகி நாகர் கோவில் மகா வித்தியாலய மாணவர்கள் 21 பேர் படுகொலையாகியிருந்தனர்.

அன்றையதினம்படுகொலைசெய்யப்பட்ட மாணவர்களின் நினைவாகவும், முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்ட மக்களின் நினைவாகவும் சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதேவேளை, அஞ்சலி நிகழ்வுகள் முடிவுற்று ஏற்பாட்டாளர்கள் நிகழ்விடத்தில் இருந்து வெளியேறிச் சற்று தூரம் சென்ற பின்னர் பருத்தித்துறை பொலிஸார் வாகனங்கள் , மோட்டார் சைக்கிளில் அவ்விடத்திற்கு வந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ராணுவத்தினர் சூடு; .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலோலியைச் சேர்ந்த பசுபதி அனுசன் (வயது -23) என்ற இளைஞனே கைமற்றும்காலில்துப்பாக்கிரவைபாய்ந்த நிலையில் படுகாயமடைந்துள்ளார்.

மந்திகை வைத்தியசாலைக்கு முன்பாக காவல் கடமையில் ஈடுபட்டடிருந்த படைச் சிப்பாய் ஒருவர், இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டுள்ளார். அவரது கையில் கல்லடிப்பட்டு படுகாயமடைந்துள்ளார்.

அதனால் தாக்குதல் நடத்தியோரைத் தேடி இராணுவத்தினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அந்தவேளை, இளைஞன் மோட்டார் சைக்கிளில் பயணித்தபோது இராணுவத்தினர் மறித்தனர். எனினும் அதனை மீறிச் சென்றபோது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது என ஆரம்ப விசாரணைகளில் இராணுவத்தினர் தெரிவிக்கின்றனர்.

அதன்போது சூட்டுக்கு இலக்காகிய இளைஞன் வீட்டுக்குச் சென்று அவசர உதவி அம்புலன்ஸ் சேவையில் மந்திகை வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளார். குருதிப் போக்கு உள்ள போதும் இளை ஞன் பாதுகாப்பாக உள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. அத்துடன், கையில் படுகாயமடைந்த படைச் சிப்பாய், மந்திகை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பலாலி இராணுவ வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## ராணுவத்தினர் சூடு; .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடக சந்திப்பில் தெரிவிக்கையில் -

இவ்வாறுகொரோனாதொற்றிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தவர்கள் ஐவருக்கு நேற்றைய தினம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் வைரஸ்கண்டறியப்பட்டதுஎனஅறிக்கை வந்துள்ளது. எனினும் அது இறந்த வைரஸாக இருக்கலாம் என்றே நம்புறோம்.

இது தொடர்பாக சுகாதார அமைச்சருக்கும்அறிவுறுத்தல்வழங்கியுள்ளோம். அவர்கள் ஐவரையும் அவர்களது குடும்பத்துடன் அவர்களது வீடுகளில் எதிர்வரும் 14 நாள்களுக்கு தனிமைப் படுத்தியுள்ளோம். ஐந்து பேருக்கும் 14 நாள்களின் பின்னர் மீண்டும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படும்.

எனவே, இது தொடர்பாக யாழ்ப்பாண மக்கள் அச்சமடையத் தேவையில்லை. ஏனெனில் இவ்வாறான சம்பவங்கள் உலக நாடுகளில் கொவிட்-19 தொற்றுக்குள்ளானவர்களுக்கும்தொற்றிலிருந்து மீண்ட பின்னரும் பரிசோதனையில் தொற்று என அறிக்கை வந்துள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் அறிவுறுத்தலுக்கு அமைய கொரோனா தொற்று நோயை இல்லாதொழிக்க நீண்டகாலம் செல்லும். எனவே மக்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தமது வாழ்க்கையைக் கொண்டுசெல்வதன் மூலமே கொரோனா தொற்றிலிருந்து தங்களை பாதுகாத்துக்கொள்ள முடியும் - என்றார்.

## சுமந்திரனின் பதில் வெளிப்படையானது மிக ......................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு நற்சான்றுப் பத்திரம் வழங்கியிருக்கின்றார் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன்.

அண்மைக்காலத்தில்தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்குள் பல சர்ச்சைகளை ஏற்படுத்தியசுமந்திரனின்பேட்டிவெளியாகி சுமார்ஒருவாரத்தின்பின்னர்கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தன் தமது மௌனம் கலைத்து , மேற்படி சர்ச்சைக்கு முற்றுப் புள்ளிவைக்குமாற்போலஓர்அறிக்கையை வெளியிட்டிருக்கின்றார்.

அந்த அறிக்கையின் முழு விவரம் வருமாறு:

முன்னாள் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளருமான ஜனாதிபதிச் சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரனினால் ஊடகங்களுக்கு வழங்கப்பட்டதாகக் கூறப்படும் பேட்டியொன்றின்மீது எனது கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது.

பிரிக்கப்படாத, பிரிக்கமுடியாத ஒரே இலங்கைக்குள் தேசிய பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் காண்பதற்கான முயற்சிகளை முறியடிக்கும் உள்நோக்கத்தோடும் இந்த நாட்டு மக்கள் மத்தியில், அதிலும் குறிப்பாகத் தமிழ் மக்கள் மத்தியில் குழப்பத்தையும் ஒற்றுமையின்மையையும் ஏற்படுத்தும் நோக்கத்தோடும் கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பதில் திரு. சுமந்திரன் வெளிப்படையாகவும் நேர்மையாகவும் செயற்பட்டுள்ளார்.

இந்திய இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு அரசமைப்பிற்கான 13 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக பல்லின, பல்கலாசார, பன்மைத்துவ சமூகமொன்றின் தேவைகளைப் பூர்த்தி செய்யுமுகமாக கணிசமானளவு கருத்தொருமைப்பாட்டின் அடிப்படையில் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் கொண்டுவருவதற்காக அடுத்தடுத்துப் பதவிக்கு வந்த ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸா, ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் தலைமைத்துவத்தின் கீழ் பெருமளவு பணிகள் செய்யப்பட்டுள்ளன. இவையனைத்தும் பதிவான விடயங்களாகும்.

எம்.ஏ. சுமந்திரனிடம் கேட்கப் பட்ட கேள்விகள் சிங்கள மற்றும் தமிழ் மக்கள் மத்தியில் குழப்பத்தை எற்படுத்தும் நோக்கம் கொண்டவையாக உள்ளன.

இப்பேட்டியின் நோக்கம் சிங்கள மற்றும் தமிழ் மக்கள் ஆகிய அனைவர் மத்தியிலும் தற்போது நடைபெற்று வரும் நடைமுறையைக் குழப்புவதாகும். அத்தகைய தீய முயற்சிகளினால் மக்கள் குழப்பமடையவும் தவறாக வழிநடத்தப்படவும் கூடாது. 1949 ஆம் ஆண்டு தொடங்கி 70 ஆண்டுகளுக்கு மேலாக நீடிக்கும் தமிழ் அரசியல் போராட்டம் போன்ற சமத்துவத்திற்கும் நீதிக்குமான ஒரு நீண்ட அரசியல் போராட்ட வரலாற்றின்போது பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன. தமிழர் போராட்டம் தொடங்கியபோது அது ஜனநாயக ரீதியானதாகவும் சமாதான வழியிலானதாகவும் வன்முறையற்றதாகவுமே இருந்தது. ஜனநாயக வழியிலானதும், சமாதானமானதும் வன்முறையற்றதுமான தமிழர் போராட்டம் தொடங்கி ஒரு 30 ஆண்டு காலப்பகுதியின் பின்னர் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் 70களின் பிற்பகுதியிலும் 80களின் தொடக்கத்திலும் தமது ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தனர். முதல் மூன்று தசாப்தங்களின் போது தமிழர் பிரச்சினைக்கு நியாயமானதொரு தீர்வு காணப்பட்டிருப்பின், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஒருபோதும் தோன்றியிருக்காது. அகிம்சை வழியில் பற்றுறுதி கொண்டிருந்த தமிழ்த் தலைவர் எஸ். ஜே.வீ. செல்வநாயகத்தோடு செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கைகளையும் ஒப்பந்தங்களையும் பெரும்பான்மை இனத் தலைவர்கள் அமுல்ப்படுத்தத் தவறிமையே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் உருவாவதற்கு வழிவகுத்தது.

2009 ஆம் ஆண்டுவரை நீடித்த ஆயுதப் போராட்டக் காலத்திலும் கூட அமைதிவழி தமிழர் போராட்டம் தொடர்ந்தது; இன்னும் தொடர்கிறது. நீதி மற்றும் சமத்துவத்தின் அடிப்படையில் எதிர் காலம் எவ்வாறு அனைத்து மக்களுக்கும் ஒளிமயமானதாக அமையக்கூடும் என்பதை இந்நாட்டு மக்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். நீதியானதும் ஏற்றுக்கொள்ளத்தக்கதுமான தீர்வொன்றையே தனது இறுதியான ஆர்வமாகக் கொண்டுள்ள திரு. சுமந்திரன் அந்தக் கண்ணோட்டத்திலிருந்தே வினாக்களுக்கு விடையளித்துள்ளார். சில விடயங்கள்மீது அவர் தனது சொந்தக் கருத்துக்களையும் வெளியிட்டுள்ளார்.

நீதி, சமத்துவம், சுயமரியாதை மற்றும் கௌரவம் ஆகியவற்றின் அடிப்படையிலான தீர்வொன்றின்மூலம் ஏற்படுத்தப்படும் நிரந்தர சமாதானத்தின் அடிப்படையில் தேசியப் பிரச்சினை தீர்த்து வைக்கப்பட்டால் மாத்திரமே இலங்கைக்கும் அதன் அனைத்து மக்களுக்கும் முன்னேற்றமும்செழிப்பும்ஏற்படமுடியும். அத்தகைய தீய முயற்சிகளினால் தவறாக வழிநடத்தப்பட வேண்டாமெனவும் பெரும் கருத்தொருமைப்பாட்டின் அடிப்படையில் தேசியப் பிரச்சினைக்கு நியாயமானதும் ஏற்றுக்கொள்ளத்தக்கதுமான தீர்வொன்றைக் காணும் முயற்சியின் மீது கவனத்தைச் செலுத்துமாறு சிங்களவர், தமிழர் மற்றும் ஏனைய அனைத்து இனத்தவர்கள் ஆகிய அனைத்து மக்களையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது தேசியப் பிரச்சினைக்கான தீர்வுடன் நேரடியாகத் தொடர்புபடாத விடயங்கள் மீது முரண்பாடான கருத்துக்களை வெளியிடுவதற்குப் பதிலாக, இத்தகையதொரு நிலைப்பாட்டின் பின்னால் ஒன்றுபட்டு நிற்பதிலேயே நியாயமானதும் ஏற்றுக்கொள்ளத்தக்கதுமானதொரு தீர்வினை அடைவதற்கான எமது வலிமை தங்கியுள்ளது என்பதை வடக்குக் கிழக்குத் தமிழ் மக்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கடந்த பல தசாப்தங்களாக தமிழ் மக்கள் பல வழிகளிலும் பெருமளவில் துன்பம் அனுபவித்துள்ளனர். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தோற்றம் பெறுவதற்கு முன்னரும் தமிழ் மக்கள் இன அழிப்பிற்கு ஆளாகியிருந்தனர். ஒரு பெரும் எண்ணிக்கையிலான தமிழ் மக்கள் நாட்டை விட்டுத் தப்பியோடியுள்ளனர். தமக்கு நிகழ்ந்தவற்றைத் தமிழ் மக்கள் தவிர்க்க முடியாதவாறு வேதனையோடு நினைவுகூர்வர். எனினும் முக்கிய பிரச்சினை தொடர்பிலான அவர்களது

சிந்தனையோட்டத்தை இது சிதறடித்து விடக்கூடாது. தேசியப் பிரச்சினைக்கான ஏற்றுக்கொள்ளத்தக்கதொரு தீர்வு மாத்திரமே தமிழ் மக்களுக்கு நிரந்த சமாதானத்தையும் நிம்மதியையும் முழு நாட்டிற்கும் அதன் அனைத்து மக்களுக்கும் நிரந்தர சமாதானத்தையும் செழிப்பையும் வழங்கும். இக்குறிக்கோளை அடைவதற்காக ஒற்றுமையாகப் பாடுபடுவது ஒவ்வொரு பிரசையினதும் கடமையாகும். - என்று உள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# சம்பந்தனின் தீர்ப்பு

கடந்த ஒரு வார காலத்துக்கு மேல் தமிழர் தரப்பில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி வந்த சுமந்திரனின் சிங்கள மொழி மூல செவ்வி குறித்து தமது கருத்தையும் முடிவையும் வெளிப்பட அறிவித்து, அந்தச் சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைத்திருக்கின்றார் தமிழத் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன்.

இந்த சர்ச்சைக்கு முற்றுப் புள்ளி வைக்கும் தமது அறிக்கை ஊடாக சில விடயங்களை சம்பந்தன் திட்டவட்டமாகவும் தெளிவாகவும் எடுத்துரைத்திருக்கின்றார்.

அவை புதிய சர்ச்சைக்களுக்கு வழிப்படுத்தப் போகின்றனவா அல்லது புதிய சர்ச்சைகள் ஏற்படாமல் அவற்றை அடக்கப் போகின்றனவா என்பதே கேள்வி.

சுமந்திரன் வெளிப்படுத்திய கருத்துக்குப் பின்னால் புதைந்து கிடந்த இலக்கையும் நோக்கையும் புரிந்து கொள்ளுங்கள் என்பதுதான் சம்பந்தனின் தீர்ப்பு.

அது எத்தனை தரப்புகளுக்கு ஏற்புடையது என்பது தெரியவில்லை.

தமிழர்களைப் பொறுத்தவரை இந்த நாட்டில் நீதி, சமத்துவம், சுயமரியாதை மற்றும் கௌரவம் ஆகியவற்றின் அடிப்படையிலான தீர்வொன்றின் மூலம் தேசியப் பிரச்சினை தீர்த்து வைக்கப்பட வேண்டும் என்பதே அவர்களின் வேணவா;அபிலாஷை; எதிர்பார்ப்பு; எல்லாமுமே என்கிறார் சம்பந்தன்.

அப்படி ஒரு தீர்வு எட்டப்பட்டால் மாத்திரமே தமிழர்கள் உட்பட இந்தத் தீவின் அனைத்து மக்களுக்கும் முன்னேற்றமும் செழிப்பும் ஏற்படுவதற்கான வாய்ப்புக் கிட்டும் என்ற சம்பந்தனின் முடிவு – தீர்மானம் – தீர்க்கதரிசனம் – அவரின் நீண்ட அரசியல் பட்டறிவின் வெளிப்பாடு அல்லது பிரதிபலிப்பு.

அத்தகைய தீர்வை எட்டுவதற்கு இந்தச் சமயத்தில் தமிழர் தரப்பு எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதைத்தான் இந்தச் சர்ச்சைக்குரிய தீர்ப்பில் கோடி காட்டியிருக்கின்றார் அரசியல் பிதாமகர் சம்பந்தன்.

கடந்த பல தசாப்தங்களாகத் தமிழர்கள் இனவழிப்புக்கும், துன்பங்களுக்கும் ஆளாகியிருக்கின்றனர். தமிழினத்தின் அடி ஆன்மாவையே ரணப்படுத்திய அந்தக் கொடூரங்களின் வலி, நோவு ஆழமானது. அவற்றைத் தமிழர்கள் நினைவு கூர்வதும், இரைமீட்டு வெஞ்சினம் கொள்வதும் தவிர்க்க முடியாத கட்டாயங்கள்தாம்.

அந்தப் பின்புலத்தில் கடந்த காலங்களின் மறக்கவே முடியாத நினைவுகளில் மூழ்கியவாறு, நிகழ்காலத் தீர்வுக்கான வாய்ப்புகளைக் குழப்பாதீர்கள் என்பதுதான் சம்பந்தனின் அறிக்கையில் நடுமையமாக இழையோடும் முக்கிய விடயமாகும்.

சுமந்திரனை சர்ச்சைக்குரிய அந்தப் பேட்டியில் சிக்க வைத்தவர்களின் நோக்கம் சிங்களவர் மற்றும் தமிழ் மக்கள் ஆகிய அனைவர் மத்தியிலும் தற்போது நடைபெற்று வரும் நடைமுறையை – அதாவது சமாதானத் தீர்வை உருவாக்கும் சூழ்நிலையை – குழப்புவதுதான் என்பதை அறுதியிட்டுத் தமது அறிக்கை மூலம் தெளிவுபடுத்தியுள்ளார் சம்பந்தன்.

ஆனால் தமது வெளிப்படையான, நேர்மையான பதில்கள் மூலம் சுமந்திரன் அந்த முயற்சியை முறியடித்துள்ளார் என்று நற்சான்றிதழ் தந்திருக்கின்றார் சம்பந்தன்.

அதுவல்ல விடயம். சம்பந்தனுக்கு மிக நெருக்கமான நம்பிக்கை உரிய தளபதி சுமந்திரனே. அவர் தொடர்பில் சம்பந்தனின் சான்றிதழ் புதுமையானதல்ல. 'வேலிக்கு ஓணான் சாட்சியம்' என்று கூட இந்த நற்சான்றை யாரும் கூற முடியும்.

ஆனால், சம்பந்தனின் அறிக்கையில் 'தோன்றா எழுவாய்' போல தோன்றாக் கருத்து ஒன்று புதைந்துள்ளது.

இப் பேட்டியின் நோக்கம் தமிழ், சிங்கள மக்கள் மத்தியிலான தீர்வு முயற்சிக்கான சூழலைக் குழப்புவது என்றால் –

அதை சுமந்திரன் தமது நேர்மையான, வெளிப்படையான பதில் மூலம் முறியடித்துள்ளார் என்றால் –

சுமந்திரனின் அந்தப் பேட்டியை வைத்துக் கொண்டு நமது தமிழ்க் கட்சித் தலைவர்கள் – மாவை சேனாதிராஜா உட்பட – நடத்திய 'திருக்கூத்து' எந்த வகையறாவைச் சேர்ந்தது?

பேட்டியை முன்னெடுத்தவரின் நோக்கத்தை – தமிழ் சிங்கள மக்கள் இடையே குழப்பத்தை ஏற்படுத்தும் இலக்கை – தோளில் சுமந்து மேற்கொண்டவர்களாகவே இந்தத் 'திருக்கூத்தை' முன்னெடுத்த ஒவ்வொருவரின் நடவடிக்கையும் அமைந்துள்ளது. அதுதான் சம்பந்தனின் தீர்ப்பு.

செம்மனச்செல்விக்காகப் புட்டுக்கு மண் சுமந்த சிவனாருக்கு விழுந்த அடிபோல, சம்பந்தனின் இந்தத் தீர்ப்பு மாவை தொடக்கம் சரவணபவன் வரை அனைவருக்கும் முதுகில் விழுந்த ஒரு தட்டுத்தான்.

இதைப் புரிந்தும் புரியாதவர்கள் போல அவர்கள் சமாளிப்பார்கள். அதுதான் நடக்கும்.

# செய்த பாவத்துக்கு பலன் அனுபவிக்கின்றார் ராஜித

## கூறுகின்றார் அமைச்சர் பந்துல



கொழும்பு, மே. 15

ஜனாதிபதித் தேர்தலில் இலட்சக்கணக்கான வடக்கு, கிழக்கு மக்கள் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வாக்களிக்கத் தயாராகவிருந்த நிலையில், அதைத் தடுத்த பாவத்தையே ராஜித சேனாரத்ன அனுபவித்து வருகிறார் என தெரிவித்துள்ளார் அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணரத்ன.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

எனது முன்னாள் நண்பர் ராஜித சில பாரதூரமான விடயங்களை தெரிவித்திருந்தார். கோட்டாபய ராஜபக்ஷ மக்களை கொன்று, முதலைக்கு இரையாக்கிச் சாட்சியங்களை அழித்தார். அதனை பார்த்தோம் என இரண்டு பொய்ச் சாட்சிகளை அழைத்து வந்து, செய்தியாளர் சந்திப்பை நடத்தினார். இதனால் வடக்கு - கிழக்கில் தமிழ் மக்கள் எமக்கு வழங்கவிருந்த வாக்குகளையும் முழுமையாக இல்லாமல் செய்தார்.

இதனால் வடக்கு - கிழக்கில் இலட்சக்கணக்கானவர்கள் பயமடைந்தனர். கொல்லப்படும் மக்கள் முதலைக்கு இரையாக்கப்பட்டனர் என்ற செய்தியை கேட்டதும், அந்த மக்களின் உடலில் ரோமங்கள் சிலிர்க்கும் நிலைமை ஏற்பட்டது. அந்தளவிற்கு ராஜித பொய்களைக் கூறினார்.

அரச ஊடகங்களில் எந்த நேரமும் இதனைத் தெரிவித்துக் கொண்டிருந்தார். அவர்கள் செய்த பாவத்தின் பலன்களிற்கு எம்மால் எதையும் கூற முடியாது - என்றார்.

# ராஜிதவை மட்டுமல்ல ரிஷாத்தையும் கைது செய்!

## ஞானசார தேரர் கோரிக்கை

முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியூதீனை கைது செய்ய வேண்டும் என பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

முன்னார் அமைச்சர் ராஜித சேனாரட்ன மட்டுமன்றி ரிஷாத்தையும் கைது செய்ய வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் இஸ்லாமிய அடிப்படைவாதம் விரவிச் செல்வதற்கும், அடிப்படைவாதிகளுக்கு அரசியல் அடைக்கலம் வழங்கவும் ரிஷாட் பதியூதீன் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ உதவியுள்ளார் என ஞானசார தேரர் குற்றம் சுமத்தியுள்ளார்.

ரிஷாத்தை கைது செய்யாமை நாட்டு மக்களின் முக்கியமான பிரச்சினைகளில் ஒன்றாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

ரிஷாத்தை கைது செய்து மக்களின் எதிர்பார்ப்புக்களை அரசு நிறைவேற்ற வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

## 32 பேர் ...............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எண்ணிக்கை 477 பேரினால் உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, இதுவரை 925 பேர் இலங் கையில் கொரோனா நோயாளிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் 9 பேர் உயிரிழந்துள்ள நிலையில் தற்போது 439 பேர் வைத்திய சாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

## தனிமைப்படுத்தப்பட்டிருந்த .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்படி இப்போது நாட்டில் தனிமைப் படுத்தல் பகுதி என்று எதுவும் இல்லையென அவர் மேலும் குறிப்பிட்டார்.

நேற்று அடையாளம் காணப்பட்ட கொரோனா தொற்றுக்குள்ளானவர்கள் 10 பேரில் 8 பேர் கடற்படைச் சிப்பாய்கள் என் றும் மற்ற இருவர் அவர்களுடன் பழகியவர்கள் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

எதிர்வரும் இரண்டு வாரங்களுக்கு மக்கள் மேலும் கவனமாக இருக்கவேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## சுமந்திரன் தொடர்பில் .....................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தோம். சில சிறுவர்கள் சிங்களம் தெரியாமல் நாம் கருத்து சொன்னோம் எனக் கருத் திட்டு வருகிறார்கள். சுமந்திரன் விடயமாக விரைவில் சம்பந்தனுடன் பேசவுள்ளோம்.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன்.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் முன்னாள் மாவட்ட பொறுப்பாளர் கிறிஸ்ரி குகராஜாவின் 21ஆவது நினைவுதினம் வவுனியாவில் அமைந்துள்ள அவரது நினைவு தூபியடியில் நேற்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் -

நாம் எந்த நேரத்தில் தேர்தல் வந்தாலும் அதனைச் சந்திப்பதற்குத் தயாராக இருக்கின்றோம். மக்களின் ஜனநாயக முறையிலான வாக்களிப்பு உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும். மக்கள் தற்போது அச்சத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். கொரோனா தொற்று நோய் அதிகரித்துவரும் நிலையில் மக்களின் வாக்குரிமையை ஜனநாயக மரபு மீறலைக் கொண்டு செயற்படுத்துவது ஏற்றுக் கொள்ள முடியாது. எனவே சூழலுக்கு ஏற்ற வகையில் தேர்தலை நடத்தவேண்டும் என்பதை நான் இங்கு கூறிக்கொள்ள விரும்புகின்றேன். மக்கள் கூட்டமைப்பை நிச்சயம் ஆதரிப்பார்கள். அவர்களுக்கு நம்பிக்கை தரக்கூடிய நிலைமையை நாம் ஏற்படுத்த வேண்டும்.

எங்கள் மக்களின் விடுதலைதான் எமது பிரதான நோக்கம். அதற்காகவே துப்பாக்கி ஏந்தினோம். அது புனிதமானதென்பதை அனைவரும் ஒத்துக்கொள்ளவேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற வகையில் சுமந்திரன் தொடர்பாக எதிர்மாறான கருத்துக்களை நாம் இதுவரை கூறவில்லை.

எனினும் முக்கிய பதவியில் இருந்து கொண்டு விடுதலைப் போராட்டத்தை ஏற்கவில்லை என்று சொல்வது அவரது தனிப்பட்ட கருத்து என்பதை ஏற்க முடியாது. ஆயுதப் போராட்ட விடயத்தில் தமிழ்க் கூட்டமைப்பின் கருத்துக்கள் அத்தனையும் ஒன்றாக இருக்க வேண்டும்.

இது விடயம் தொடர்பாகச் சம்பந்தன் ஐயாவைச் சந்தித்து உரையாட இருக்கின்றோம்.

அத்துடன் அவர் தெரிவித்த கருத்துக்கள் பல ஊடகங்களில் சிங்களமொழி பெயர்ப்பு வந்திருக்கின்றது. முன்னாள் வடக்கு மாகாண அவைத் தலைவர் சிவஞானம் அந்த விடயம் தொடர்பாகச் சரியான விளக்கம் ஒன்றை அளித்துள்ளார். அதில் சொல்லப்பட்ட விடயங்கள் அத்தனையும் உண்மை. சிங்களம் தெரியாது என்பதற்காக கருத்துக்களை மாறிச் சொல்ல வேண்டிய நிலை எமக்கில்லை. அப்பிடி சொல்வது எங்களை மலினப்படுத்துவது போல தெரிகின்றது - என்றார்.

இந்தியாவின் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களுக்கு

# ரூ. 19 ஆயிரம் கோடி உலக வங்கி ஒதுக்கீடு

இந்தியாவின் சமூக பாதுகாப்புத் திட்டங்களுக்காக உலக வங்கி 19 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கியுள்ளது.

இந்தியாவில் கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்த இரண்டு மாதங்களாக ஊரடங்கு உத்தரவு நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளதால் அனைத்துத் தரப்பு மக்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தொழில் நிறுவனங்கள் மூடப்பட்டதால் கடும் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. பொருளாதாரத்தை மீட்டெடுக்கவும், மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் சுயசார்பு இந்தியா என்ற பெயரில் சிறப்புத் திட்டங்களைக் கொண்டு வந்துள்ளது.

இந்த நிலையில் இந்தியாவின் கொரோனா தடுப்பு திட்டங்களுக்கு உதவும் வகையில் உலக வங்கி 19 ஆயிரம் கோடி ரூபாய் (1 பில்லியன் டொலர்) ஒதுக்கி உள்ளது. சமூகப் பாதுகாப்புத் திட்டங்களுக்காக இந்த நிதியை ஒதுக்கியிருப்பதாக உலக வங்கி கூறியுள்ளது.

# கொரோனாவைக் குணமாக்க ஆயுர்வேத மருந்து சோதனை!

நடவடிக்கையைத் தொடங்கியது இந்திய அரசு

இந்தியாவில் அடுத்த வாரம் முதல் கொரோனா நோயாளிகளுக்குப் பாரம்பரியம் மிக்க ஆயுர்வேத மருந்துகளைக் கொடுத்துச் சோதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவில் ஊரடங்கு கட்டுப்பாடுகளுக்கு மத்தியிலும் கொரோனா வைரஸ் வேகமாகப் பரவி வருகிறது. இதன் பாதிப்புக்கு உள்ளானோர் எண்ணிக்கை இன்று 82 ஆயிரத்தைக் கடந்தது.

கொரோனா வைரஸ் தொற்றுநோய்க்குஇதுவரை மருந்தும் இன்றுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

நோய் அறிகுறிகளுக்கான மருந்துகளும், நோய் எதிர்ப்புச்சக்தி மருந்துகளும், ஆரோக்கியமான உணவும் தான் வழங்கப்பட்டு, தீவிர மருத்துவக் கவனிப்புக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் அடுத்த வாரம் முதல் கொரோனா நோயாளிகளுக்குப் பாரம்பரியமிக்க ஆயுர்வேத மருந்துகளை கொடுத்து சோதிக்க இந்தியாவில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதை இந்திய மத்திய அமைச்சர் ஸ்ரீபாத் யெசோ நாயக் நேற்று டுவிட்டர் பதிவில் தெரிவித்தார். அதில் அவர் கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து மீண்டு வருவதற்கு நமது பாரம்பரியமிக்க மருத்துவ முறை வழிகாட்டும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

தமிழ்நாட்டில்

# சாராயச் சர்ச்சை இன்னும் முடிவுக்கு வந்தபாடில்லை

தமிழ்நாட்டில் அரச மதுபானக் கடைகளை மீண்டும் திறப்பது தொடர்பான சர்ச்சை தொடர்ந்து நீடிக்கிறது.

ஊரடங்குக் காலத்தில் மதுபானக் கடைகளை மீண்டும் திறக்க தமிழக அரசு வழங்கிய அனுமதியை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் மதுபானக் கடைகளை உடன் மூடிவிட்டு இணையம் மூலம் விற்பனை செய்வது குறித்துச் சிந்திக்குமாறு உத்தரவிடப்பட்டது.

அதனை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தை நாடியது தமிழ்நாடு அரசு. இந்த மேல்முறையீட்டு மனு மீது விசாரணை நடத்திய உச்ச நீதிமன்றம், கடைகளை மூடும்படி சென்னை உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவிற்கு இடைக்காலத் தடை விதித்தது.

தமிழகத்தில் ஊரடங்கு காரணமாக மூடப்பட்ட மதுக்கடைகள், கடந்த 7ஆம் திகதி திறக்கப்பட்டு 2 நாட்கள் மது விற்பனை நடைபெற்றது. இதனை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கை விசாரித்த சென்னை உயர்நீதிமன்றம், ஊரடங்கு முடியும் வரை தமிழகத்தில் மதுக்கடைகளை மூடும்படி உத்தரவு பிறப்பித்தது.

தமிழக அரசின் மேல்முறையீட்டு மனு இன்று விசாரணைக்கு வந்தது. நீதிபதிகள் எல். நாகேஸ்வரராவ், எஸ்.கே. கவுல், பி.ஆர். கவாய் ஆகியோர் அடங்கிய அமர்வு விசாரணை நடத்தியது. அப்போது, மதுபானக் கடைகள் மூடப்பட்டுள்ளதால் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டிருப்பதாகவும், கடைகளை திறக்க அனுமதிக்க வேண்டும் என்றும் தமிழக அரசு தரப்பில் வாதிடப்பட்டது.

சென்னை உயர் நீதிமன்றத்தின் உத்தரவை நீக்க வேண்டும் என்றும் தமிழக அரசின் சார்பில் கேட்கப்பட்டது. மதுக்கடைகளை மூட வேண்டும் என்ற சென்னை உயர்நீதிமன்ற உத்தரவுக்கு இடைக்காலத் தடை விதித்தனர். அத்துடன் சென்னை உயர்நீதிமன்றத்தில் நடைபெறும் வழக்கு விசாரணைக்கும் இடைக்கால தடை விதித்தனர்.

இதன்மூலம் அரச மதுக் கடைகளைத் திறப்பதற்கு விதிக்கப்பட்ட தடை நீங்கியிருக்கிறது. எனினும், இன்று மாலைக்குள் உச்சநீதிமன்றத்தால் விரிவான உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பிறகே கடைகளை திறக்க முடியுமா? அல்லது இணையம் மூலமாக விற்பனை செய்ய வேண்டுமா? என்பது தெரியவரும்.

# தொற்று எண்ணிக்கையில் சீனாவை விஞ்சும் இந்தியா

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை சீனாவை நெருங்கிவிட்டது. இன்று அனேகமாக அது சீனாவின் எண்ணிக்கையைக் கடந்து முன்னேறிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஏற்கனவே இந்தியாவில் தொற்றுக்குள்ளானோர் எண்ணிக்கை இன்று மதியம் வரையில் 82 ஆயிரத்து 264ஆக உயர்ந்திருந்தது. 2 ஆயிரத்து 649 பேர் உயிரிழந்துள்ளனர்.



இந்தியாவில் கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்த ஊரடங்கு உட்பட்ட பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. கடந்த ஒரு வார காலமாக அந்த நடவடிக்கைகளில் மெல்ல மெல்ல தளர்வு கொண்டு வரப்படுகின்றது.

அதேசமயம், பரிசோதனைகளை அதிகரிக்க அதிகரிக்க, புதிய நோயாளிகளின் எண்ணிக்கை மற்றும் உயிரிழப்பும் தொடர்ந்து உயர்ந்து வருகிறது.

இந்நிலையில் மத்திய சுகாதாரத்துறை இன்று வெளியிட்டுள்ள தகவலின்படி, இந்தியாவில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 82 ஆயிரத்தைத் தாண்டி உள்ளது. இன்று காலையுடன் முடிந்த 24 மணி நேரத்தில் மட்டும் 3 ஆயிரத்து 967 பேருக்கு பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. 100 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதன் மூலம் கொரோனா வைரசால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 2 ஆயிரத்து 649 ஆக உயர்ந்துள்ளது. இதுவரை 29 ஆயிரத்து 920 பேர் கொரோனா பாதிப்பில் இருந்து மீண்டுள்ளனர்.

கொரோனா பாதிப்பில் சீனாவை இந்தியா இன்று இரவுக்குள் விஞ்சிவிடும்.

கொரோனா வைரஸ் வெளிப்பட்டசீனாவில் இதுவரை 82 ஆயிரத்து 933 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். 4 ஆயிரத்து 633 பேர் உயிரிழந்துள்ளனர். 78 ஆயிரத்து 209 பேர் பாதிப்பில் இருந்து மீண்டுள்ளனர். கடந்த சில தினங்களாக புதிய பாதிப்பு ஒற்றை இலக்கத்திலேயே உள்ளது. இன்றைய நிலைவரப்படி 91 பேர் மட்டுமே மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தியாவில் கொரோனா பாதிப்பில் மகாராஷ்டிரா மாநிலம் தொடர்ந்து உச்சத்தில் உள்ளது. அங்கு மொத்தம் 27 ஆயிரத்து 524 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. ஆயிரத்து 19 பேர் உயிரிழந்துள்ளனர். குஜராத்தில் இதுவரை 9 ஆயிரத்து 591 பேருக்கும், தமிழகத்தில் 9 ஆயிரத்து 676 பேருக்கும், டெல்லியில் 8 ஆயிரத்து 470 பேருக்கும், மத்திய பிரதேசத்தில் 4 ஆயிரத்து 426 பேருக்கும், ராஜஸ்தானில் 4 ஆயிரத்து 536 பேருக்கும், உத்தர பிரதேசத்தில் 3 ஆயிரத்து 902 பேருக்கும் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

# மேற்கு வங்கத்தில் கொரோனா அரசியல் மோதலாக மாறுகிறது

கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்தும் விவகாரத்தில் மத்தியில் உள்ள பாரதிய ஜனதா அரசுக்கும், மேற்கு வங்காள மாநில அரசுக்கும் இடையே மோதல் ஏற்பட்டு உள்ளது.

மேற்கு வங்காள முதலமைச்சரும், திரிணாமுல் காங்கிரஸ் தலைவருமான மம்தா பானர்ஜி மத்திய அரசையும், பிரதமர் மோடியையும், அமித்ஷா உள்ளிட்ட பாரதிய ஜனதா தலைவர்களையும் கடுமையாக விமர்சிப்பவர்.

இதனால் மேற்கு வங்காளத்தில் ஆளும் திரிணாமுல் காங்கிரஸ் தொண்டர்களுக்கும், பாரதிய ஜனதா தொண்டர்களுக்கும் இடையே அவ்வப்போது மோதல்கள் ஏற்படுவது உண்டு.

மேற்கு வங்காள மாநிலம் ஒரு காலத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் கோட்டையாக விளங்கியது. பின்னர் அங்கு மம்தா பானர்ஜியின் செல்வாக்கு ஓங்கியதால் திரிணாமுல் காங்கிரஸ் ஆட்சியைப் பிடித்தது.

கடந்த ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் மேற்கு வங்காளத்தில் பாரதிய ஜனதா கணிசமான இடங்களைக் கைப்பற்றியது. அங்கு பாரதிய ஜனதா வளர்ந்து வருவது மம்தா பானர்ஜிக்கு பெரும் சவாலாக உள்ளது.

மேற்கு வங்காளத்தில் அடுத்த ஆண்டு சட்டசபை தேர்தல் நடைபெற இருக்கிறது. இந்தத் தேர்தலில் ஆட்சியை கைப்பற்ற திட்டமிட்டுள்ள பாரதீய ஜனதா அதற்கான வியூகங்களை வகுத்து வருகிறது.

கொரோனாவை கட்டுப்படுத்தும் விவகாரத்தில் ஊரடங்கு உத்தரவை மத்திய அரசு தாமதமாக நடைமுறைப்படுத்தியதாக குற்றம்சாட்டிய மம்தா பானர்ஜி, விமான நிலையங்களை முன்கூட்டியே மூடி இருக்கவேண்டும் என்றும் கூறினார்.

அதற்கு, மேற்கு வங்காளத்தில் கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்த மம்தா பானர்ஜி அரசு தவறி விட்டதாகவும், போதிய அளவு சோதனைகளை நடத்தவில்லை என்றும் கூறிய மத்திய அரசு, அங்குள்ள சில மாவட்டங்களில் ஆய்வு நடத்த நிபுணர்கள் குழுவை அனுப்பி வைத்தது. இதற்கு திரிணாமுல் காங்கிரஸ் கடும் கண்டனம் தெரிவித்தது.

அத்துடன் பிற மாநிலங்களில் உள்ள மேற்கு வங்காள தொழிலாளர்களை திரும்ப அழைக்கும் விவகாரத்தில் திரிணாமுல் காங்கிரஸ் ஒத்துழைக்க மறுப்பதாக உள்துறை அமைச்சர் அமித்ஷா சுமத்திய குற்றச்சாட்டையும் அந்தக் கட்சி மறுத்தது.

கடந்த 11ஆம் திகதி காணொலி காட்சி மூலம் முதலமைச்சர்களுடன் இந்தியப் பிரதமர் மோடி நடத்திய ஆலோசனையில் கலந்து கொண்ட மம்தா பானர்ஜி, கொரோனாவை கட்டுப்படுத்த மாநிலங்களுக்கு மத்திய அரசு போதிய நிதி வழங்கவேண்டும் என்றார்.

பின்னர் இந்த கூட்டம் பற்றி கருத்து தெரிவித்த அவர், மேற்கு வங்காளத்துக்கு சட்ட ரீதியாக அளிக்கவேண்டிய நிதியைக் கூட மத்திய அரசு வழங்க மறுப்பதாகக் குற்றஞ்சாட்டினார்.

மேற்கு வங்காளம் அடுத்த ஆண்டில் சட்டசபை தேர்தலை சந்திக்க இருக்கும் நிலையில், கொரோனா பிரச்சினை தொடர்பாக மம்தா பானர்ஜி அரசுக்கும், மத்திய அரசுக்கும் இடையே ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடு அரசியல் மோதலாக உருவெடுத்து இருக்கிறது.

# திருப்பதியில் முகக்கவசம் அணிவது இனி கட்டாயம்!

இந்தியாவின் புகழ்பெற்ற ஆலயங்களில் ஒன்றான திருப்பதியில் வெளியில் நடமாடுபவர்கள் கட்டாயம் முகக் கவசம் அணிய வேண்டும் என்று நகராட்சி சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா ஊரடங்கையொட்டி கடந்த மார்ச் 20ஆம் திகதி முதல் திருப்பதி கோவிலில் பக்தர்கள் அனுமதி நிறுத்தப்பட்டுள்ளது.

வருகிற 17ஆம் திகதிக்குப் பிறகு ஊரடங்கு தளர்த்தப்பட்டால் திருப்பதியில் பக்தர்களை தரிசனத்திற்கு அனுமதிப்பதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடந்து வருகிறது.

திருப்பதியில் உள்ள ரூயா, சிம்ஸ் வைத்தியசாலைகளில், கொரோனாவால் பாதிக்கப்பட்ட 19 பேர் தனிமைப்படுத்தப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

வெளி மாநிலங்களில் இருந்து வருபவர்களும் சென்னை கோயம்பேடு சந்தைக்குச் சென்று வந்த லொறி டிரைவர்கள், வியாபாரிகள் உள்ளிட்டவர்களுக்கும் மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் திருப்பதியில் வெளியில் நடமாடுபவர்கள் கட்டாயம் முகக் கவசம் அணிய வேண்டும் என்று நகராட்சி சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து திருப்பதி நகராட்சி ஆணையர் கிரிஷ், "திருப்பதியில் இன்று முதல் முகக் கவசம் அணியாமல் வெளியே சுற்றுபவர்களுக்கு ரூ.500, சாலைகளில் எச்சில் துப்புபவர்களுக்கு ரூ.1000, கடைகளில் சமூக இடைவெளி பின்பற்றாதவர்களுக்கு ரூ.1,000, சானிடைசர் பயன்படுத்தாத கடைகளுக்கு ரூ.1000 அபராதம் விதிக்கப்படும்" என எச்சரிக்கை விடுத்தார்.

# உயர் பாதுகாப்பு வலயத்தினுள் ஆப்கானில் குண்டுத் தாக்குதல்

## படையினர் உட்பட 5 பேர் உயிரிழப்பு; 50 பேர் காயம்

ஆப்கானிஸ்தானில் இராணுவ நீதிமன்றம் அருகே நடந்த குண்டு வெடிப்பில் இராணுவத்தினர் உள்பட 5 பேர் உடல் சிதறி உயிரிழந்தனர். எந்த அமைப்பும் இந்தத் தாக்குதலுக்குப் பொறுப்பேற்கவில்லை

கடந்த செவ்வாய்க்கிழமை தலைநகர் காபூலில் உள்ள அரசு மருத்துவமனையின் பிரசவ விடுதிக்குள் புகுந்து ஆயுததாரிகள் தாக்குதல் நடத்தியதில் 2 பச்சிளம் குழந்தைகள் உள்பட 24 பேர் கொல்லப்பட்டனர்.

அதே நாள் நங்கார்ஹர் மாகாணத்தில் பொலிஸ் அதிகாரியின் இறுதி ஊர்வலத்தில் நடந்த குண்டு வெடிப்பில் 40 பேர் உயிரிழந்தனர். அடுத்தடுத்து நடந்த இந்த 2 கொடூர தாக்குதல்களின் அதிர்ச்சியில் இருந்து மக்கள் மீண்டு வருவதற்குள் நேற்று நடந்த மற்றுமொரு பயங்கரவாதத் தாக்குதல் அந்த நாட்டையே உலுக்கியது.

ஆப்கானிஸ்தானின் கிழக்கு பகுதியில் உள்ள பாக்டியா மாகாணத்தின் தலைநகர் கார்டெசில் இராணுவ அமைச்சகத்தின் இயக்குனரகம் உள்ளது. இதன் அருகிலேயே மாகாண இராணுவ நீதிமன்றம், நிதி மற்றும் வருமானவரி அலுவலகங்களும் அமைந்துள்ளன. இதனால் இந்த பகுதி முழுவதும் எப்போதும் பலத்த பாதுகாப்புடன் இருக்கும். துப்பாக்கி ஏந்திய இராணுவத்தினர் தொடர்ந்து சுற்றுக் காவல் பணியில் ஈடுபடுவார்கள்.

நேற்று காலை உள்ளூர் நேரப்படி 8.30 மணியளவில் கார்டெசில் உள்ள இராணுவ அமைச்சக இயக்குநரகத்தை நோக்கி லொறி ஒன்று வேகமாக வந்தது. அப்போது சுற்றுக் காவல் பணியில் ஈடுபட்டிருந்த படையினர் இராணுவ நீதிமன்றுக்கு அருகே அந்த லொறியை நிறுத்தி சோதனை செய்தனர்.

அப்போது லொறி வெடித்துச் சிதறியது. அந்தப் பகுதியே அதிர்ந்தது. கரும்புகை மண்டலம் உருவானது. குண்டு வெடிப்பில் சிக்கிய ராணுவத்தினர் 5 பேர் உடல் சிதறி உயிரிழந்தனர். 50க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

# கொரோனாவால் பெண்களிடம் ‘அந்த மாற்றம்’ அதிகரிப்பாம்!

கொரோனா பாதிப்பால் ஊரடங்கு காலத்தில் பெண்களின் தாம்பத்ய செயல்பாடு முறை அதிகரித்துள்ளதாக ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகம் முழுவதும் பரவிய கொரோனா வைரஸ் மக்களின் குடும்ப வாழ்க்கையில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தி உள்ளது.

இன்னும் மருந்து கண்டுபிடிக்கப்படாத இந்த வைரசுக்கு சமூக இடைவெளி ஒன்றே தீர்வாக உள்ளது. ஆனால், வீடுகளுக்குள் தம்பதியரின் நெருக்கம் மற்றும் பிரிவு இரண்டுமே அதிகரித்துள்ளது.

உலக நாடுகள் பலவும் ஊரடங்கை அறிவித்து மக்களை வீடுகளுக்குள் முடக்கியதால் இந்த நிலைமை ஏற்பட்டது.

ஊரடங்கால் உலக அளவில் பெண்கள் அதிக அளவில் கர்ப்பம் அடைவார்கள் என ஆய்வுகள் வெளியாகி உள்ளன. இதற்கிடையே துருக்கியில் மகளிர் நலம் மற்றும் மகப்பேறு வியல் சம்பந்தப்பட்ட இதழ் ஒன்று பெண்களிடம் ஒரு ஆய்வு நடத்தியது. 58 பெண்கள் இந்த ஆய்வில் பங்கேற்றனர்.

இதில் ஊரடங்கு காலத்தில் பெண்களின் தாம்பத்ய செயல்பாடு முறை அதிகரித்துள்ளதாக தெரிவித்துள்ளனர். முன்பு வாரத்துக்கு 1.9 முறை தாம்பத்ய வாழ்க்கையில் ஈடுபட்ட நிலையில் அது ஊரடங்கு காலத்தில் 2.4 முறையாக அதிகரித்துள்ளதாக அவர்கள் கூறி உள்ளனர். ஆனால், முன்பு பெண்களிடம் கர்ப்பமாகும் ஆசை 32.7 சதவீதமாக இருந்த நிலையில் அது ஊரடங்கு காலத்தில் 5.1 சதவீதமாகக் குறைந்துவிட்டதாகத் தெரிவித்துள்ளனர்.

இதேபோல தற்போது பெண்களின் மாதவிடாய் கோளாறு பிரச்சினைகளும் அதிகரித்துள்ளது ஆய்வில் தெரிய வந்துள்ளது. முன்பு 12.1 சதவீதமாக இருந்த மாதவிடாய் பிரச்சினை தற்போது 27.6 சதவீதமாக உயர்ந்துள்ளது. பெண்களின் தாம்பத்ய ஆசைகள் மற்றும் செயல்பாடுகள் அதிகரித்துள்ளது. ஆனால், அவர்களின் தாம்பத்ய வாழ்க்கைத்தரம் குறைந்து விட்டதும் ஆய்வில் தெரிய வந்துள்ளது.

# தொற்றாளர் எண்ணிக்கை 45 லட்சத்தைத் தாண்டியது

## 3 லட்சம் பேர் இதுவரை உயிரிழப்பு

உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் தாக்குதலால் பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கை 45 லட்சத்தைத் தாண்டியுள்ளது.

சீனாவின் வுஹான் நகரில் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் கொரோனா வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது. தற்போது உலகின் 212 நாடுகள் மற்றும் தனியாட்சி நிலங்களில் பரவியுள்ள இந்த வைரஸ் பெரும் மனித அழிப்பை நிகழ்த்தி வருகின்றது.

உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகிக் குணமடைந்தோர் எண்ணிக்கை 16.97 லட்சத்தை தாண்டியுள்ளது.

இந்நிலையில், உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் தாக்குதலால் பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கை 45 லட்சத்தை தாண்டியுள்ளது.

கொரோனாவுக்கு சிகிச்சை பெறுபவர்களில் 45 ஆயிரத்து 546 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. கொரோனா வைரசுக்கு உலகம் முழுவதும் 3 லட்சத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

# கொரோனா நிவாரண நிதியிலும் மோசடிக்கு முயன்றவர் சிக்கினார்

அமெரிக்காவில் கொரோனா வைரஸ் பெயரால் சுமார் 200 கோடி ரூபாய் நிவாரணக் கடன் பெற மோசடியில் ஈடுபட்ட இந்தியப் பொறியியலாளர் ஒருவர் மாட்டிக்கொண்டார்.

அமெரிக்காவில் கொரோனா வைரஸ் தீவிரமாக பரவத்தொடங்கியதை அடுத்து கடந்த மார்ச் மாதம் ‘கேர்ஸ் சட்டம்’ என்ற பெயரில் ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டது. இந்தச் சட்டம், கொரோனா வைரஸால் ஏற்படும் பொருளாதாரப் பாதிப்புகளால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு பெருமளவில் அவசர நிதி உதவி வழங்க வகை செய்துள்ளது.

இந்த நிவாரண சட்டத்தின்படி, வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தக்கூடிய சிறு தொழில் நிறுவனங்களுக்கு 349 பில்லியன் டொலர் வரையில் (சுமார் ரூ. 55 லட்சம் கோடி) கடன் பெற முடியும்.

இந்தச் சட்டத்தில் உள்ள ஓட்டைகளைப் பயன்படுத்தி ஏமாற்றி மோசடி செய்யும் முயற்சியில் இறங்கிய இந்திய வம்சாவளி பொறியியலாளர், அங்கு சட்டத்தின் பிடியில் வசமாக சிக்கி உள்ளார்.

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் வசித்து வரும் சாங் ராய் (வயது 30) என்ற பொறியியலாளரே இந்தக் குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் கொரோனா நிவாரண சட்டத்தின் கீழ், ஒரு வங்கியில் 1 கோடி டொலர் (சுமார் ரூ.160 கோடி) கடன் வழங்குமாறு விண்ணப்பித்தார். அதில் அவர், தனது நிறுவனத்தில் 250 ஊழியர்கள் வேலை பார்க்கிறார்கள் எனவும், சராசரியாக அவர்களுக்கு மாதம் 4 மில்லியன் டொலர் சம்பளம் எனவும் குறிப்பிட்டிருந்தார்.

இரண்டாவதாக மற்றொரு வங்கியில் 30 லட்சம் டொலர் (சுமார் ரூ. 53 கோடி) கடன் கேட்டு விண்ணப்பம் அளித்தார். அதில் தனது நிறுவனத்தில் 250 ஊழியர்கள் உள்ளனர் எனவும், அவர்களது மாத சராசரி சம்பளம் 1.2 மில்லியன் டொலர் எனவும் தெரிவித்திருந்தார்.

இந்த விண்ணப்பங்கள் குறித்து விசாரணை நடத்தப்பட்டது.

அதில் 2020ஆம் ஆண்டில் சாங்ராய் அல்லது அவரது நிறுவனம், ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கியதற்கான ஆவணம் இல்லை என்பது கண்டுபிடிக்கப்பட்டது. இந்தத் தகவலை, டெக்சாஸ் தொழிலாளர் ஆணையம், புலனாய்வு அமைப்புக்கு வழங்கியது.

இதேபோன்று அவரது நிறுவனம், 2019ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டு அல்லது 2020ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் எந்த வருவாயையும் காட்டவில்லை என்று டெக்சாஸ் கணக்கு தணிக்கையாளர் அலுவலகம் தெரிவித்தது.

இது அவர் தொழில் நிறுவனங்கள் நடத்துவதாக கூறி மோசடி செய்து கடன் பெற முயற்சித்ததை காட்டுவதாக அமைந்தது.

இதனால் அவர் மீது பியூமாண்டில் உள்ள மாவட்ட நீதிமன்றில் மோசடி வழக்கு தொடரப்பட்டுள்ளது. இந்த வழக்கில் அவர் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் அவருக்கு சிறை தண்டனை விதிக்கப்படும்.

# கொரோனாவை கட்டுப்படுத்த ‘மவுத் வோஷ்’ பயன்படுமா?

## ஆய்வு செய்வதற்கு அறிவியலாளர்கள் முடிவு

‘மவுத்வோஷ்’ எனப்படும் வாயைச் சுத்தப்படுத்தப் பயன்படும் திரவம் மனித உடலில் கொரோனா பரவலை குறைக்குமா என்பது குறித்து ஆராய்ச்சி செய்ய விஞ்ஞானிகள் முடிவு செய்துள்ளனர்.

கொரோனா வைரஸ் இரண்டு அடுக்குகளால் ஆனது. வெளிப்புற அடுக்கு கொழுப்பு படலத்தால் மூடப்பட்டுமையப்பகுதியில் வைரஸைக் கொண்ட அமைப்பாக உள்ளது. இந்த வெளிப்புற கொழுப்பு அமைப்பு கொரோனாவுக்கு ஒரு பாதுகாப்பு அரண் போன்று விளங்குகிறது.

மனித உடலில் வாய் வழியாக கொரோனா வைரஸ்பரவிபின்னர்உடம்பின் மற்ற பகுதிகளுக்கும் வேகமாகப் பரவி விடுகிறது. தொண்டையில் சளி மற்றும் எச்சில் மூலமாகவும் வைரஸ் பரவி நுரையீரலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தி மூச்சு விட சிரமத்தை ஏற்படுத்துகிறது.

கொரோனாவைப் போன்றே வாய் மூலமாகப் பரவும் பிற வைரஸ்களை அழிப்பதில் ‘மவுத் வோஷ்’ முக்கிய பங்காற்றுகிறது. ‘மவுத் வோஷ்’ மூலம் வாயைச் சுத்தப்படுத்துவதால் அந்த திரவம் வாயில் இருக்கும் வைரஸ் படலங்கள், பாக்டீரியாக்கள், கிருமிகளை அழித்து விடுகிறது.

இதேபோன்று கொரோனாவை சுற்றி பாதுகாப்பு அரணாகஇருக்கும்கொழுப்பு படலத்தை மவுத் வாஷ் திரவம் சேதப்படுத்தலாம் என விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

அந்த கொழுப்பு படலம் சேதமடைந்தால் தொண்டையில் இருக்கும் வைரஸ் ஆரம்ப நிலையிலேயே செயலற்று அது மனித உடலில் மேலும் பரவும் வேகமும் குறையலாம் என விஞ்ஞானிகள் எண்ணுகின்றனர்.

இதனால், ‘மவுத் வோஷ்’ திரவம் கொரோனா பரவும் வேகத்தைக் கட்டுப்படுத்துகிறதா? என்பது குறித்து உடனடியாக ஆய்வு செய்ய அறிவியலாளர்கள் திட்டமிட்டுள்ளனர்.

# வேலங்குளம் முகாமிலிருந்து 180 பேர் இன்று விடுவிப்பு!

வவுனியா, மே. 15

வவுனியா, வேலங்குளம் விமானப்படை முகாமில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா வைரஸ் தனிமைப்படுத்தல் நிலையத்தில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்த 180 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் கொவிட் – 19 தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்ட 180 பேர் இன்று தமது சொந்த இருப்பிடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டமைக்கான சான்றிதழ்களும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டன.



நீர்கொழும்பு, அநுராதபுரம், குருணாகல், பொல்காவல, ரம்பாவ ஆகிய பகுதிகளைச் சேர்ந்த கடற்படை வீரர்களின் குடும்ப உறுப்பினர்களே இதன்போது விடுவிக்கப்பட்டனர்.

இந்த முகாமுக்கு கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் கடற்படையைச் சேர்ந்த குடும்பத்தினர்கள் அழைத்து வரப்பட்டிருந்தனர். வெலிசறையில் அமைந்துள்ள கடற்படை முகாமில் பணியாற்றிய 400இற்கும் மேற்பட்ட கடற்படை உத்தியோகத்தர்களுக்கு கொரோனா தொற்றுநோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இந்நிலையில், இந்த முகாமில் கடமையாற்றிய கடற்படை வீரர்கள் மற்றும் அவர்களது உறவினர்கள் தனிமைப்படுத்தும் நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்ட நிலையில் படிப்படியாக தனிமைப்படுத்தல் நடவடிக்கை முடிவடைந்து அவர்கள் வீடுகளுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# டெங்கு நோயின் தாக்கம் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், மே. 15

யாழில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்து வருவதாகவும், அது தொடர்பில் மக்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும் எனவும் யாழ். போதனா வைத்திய சாலை பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

யாழ். போதனா வைத்திய சாலையில் இன்று செய்தியாளர்களை சந்தித்த போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

கடந்த சில தினங்களாக மழையுடன் கூடிய கால நிலை காணப்படுகின்றது.

இந்த நிலையில் சங்கானை , உரும்பிராய் உள்ளிட்ட சில பகுதிகளில் இருந்து டெங்கு நோய் தாக்கத்திற்கு உள்ளான நோயாளிகள் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர்.

டெங்கு நோய் தாக்கத்தை கட்டுப்படுத்தும் முகமாக மக்கள் தமது வீட்டு சூழல்களை துப்பரவாக டெங்கு நுளம்பு பரவ கூடிய சூழல் இல்லாமல் பராமரிக்க வேண்டும்.

அதன் ஊடாகவே டெங்கு நோயில் இருந்து தம்மை பாதுகாத்துக்கொள்ள முடியும் என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு

விளம்பரம் (8cm x 5cm) பிரசுரிக்க!
கருப்பு வெள்ளை – ரூபாய் 500/-
முழு வர்ணம் – ரூபாய் 1000/-
தொடர்புகளுக்கு: 076 443 8622
kalaikkathiradvt@gmail.com

தோட்டக்காணி தேவை
மரக்கறித் தோட்டம் செய்யக்கூடிய வளமான செம்மண் உள்ள காணி குத்தகைக்குத் தேவை. இரசாயண உரங்கள், கிருமிநாசினிகள் ஆகியவை பாவிக்காத காணி விரும்பத்தக்கது. உரிய முறையில் பராமரித்து குத்தகை முடிவில் நல்ல நிலையில் திருப்பிக் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 078 284 5000

புழுக்கொடியல் விற்பனைக்கு.
சுத்தமான சுகாதாரமான முறையில் பொதியிடப்பட்ட புழுக்கொடியல் 1/2kg, 1/4kg பைக்கற்றுகளில் விற்பனைக்கு உண்டு. தேவைப்படின் வீடுகளுக்கும் விநியோகம் செய்யப்படும். (மேலதிக கட்டணத்துடன்)
தொடர்புகளுக்கு: 076 100 5277

வேலைவாய்ப்பு – இரவுக் காவலாளி
யாழ். நகரப்பகுதியில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு இரவுக்காவலாளி ஒருவர் தேவை. முழுநேரமாக தங்கிநின்று வேலைசெய்தால் உணவு, தங்குமிடம் வழங்கப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 077 307 8799

வீட்டுத்தோட்ட விதைகள் விற்பனைக்கு
வீட்டுத்தோட்டத்திற்கு தேவையான விதைகள் விற்பனைக்கு உண்டு.
வெண்டி, பயிற்றை, கத்தரி, கீரை, தக்காளி, பாகல், மிளகாய், சோளம், பூசணி, முள்ளங்கி, பீற்றூட், புடோல், கறிமிளகாய், சிறகவரை.
(வீடுகளிற்கும் விநியோகிக்கப்படும்.)
தொடர்புகளுக்கு: 077 411 4422

# ரிஷாத், ஹக்கீம் அரசியல் இலாபத்துக்காக முஸ்லிம் சமூகத்தை தூண்டிவிடுகின்றனர்

## மொஹமட் முஸம்மில் குற்றச்சாட்டு

கொழும்பு, மே. 15

கொரோனா வைரஸ் தாக்கத்தினால் உயிரிழந்த முஸ்லிம் சமூகத்தினரது உடலை மாத்திரம் தகனம் செய்யவேண்டும் என்பது அரசின் நோக்கமல்ல. தகனம் செய்யப்பட்ட உடல்களைக் கொண்டு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ரிஷாத் பதியுதீன், ரவூப் ஹக்கீம் ஆகியோர் அரசியல் இலாபம் தேடிக் கொள்ள முஸ்லிம் சமூகத்தினரை தூண்டி விடுகின்றார்கள் எனத் தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகப் பேச்சாளர் மொஹமட் முஸம்மில் தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர், அடிப்படைவாத சம்பவங்களுடன் முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தொடர்புக் கொண்டுள்ளார். என்ற சந்தேகத்தின் அடிப்படை பல விடயங்கள் வெளிப்பட்டுள்ளன.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ரிஷாத் பதியுதீன், ரவூப் ஹக்கீம் ஆகியோர் கொரோனா வைரஸ் தாக்கத்தினால் உயிரிழந்த முஸ்லிம் ஒருவரது உடல் தகனம் செய்யப்பட்ட விவகாரத்தை போட்டிப் போட்டுக் கொண்டு அரசியல் தேவைக்காகப் பயன்படுத்திக் கொள்கின்றார்கள்.



உயிரிழந்த முஸ்லிம் சமூகத்தினரது உடலை தகனம் செய்ய வேண்டும் என்ற தேவை அரசுக்குக் கிடையாது. கொரோனா வைரஸ் தாக்கத்தினால் உயிரிழந்தவரது உடலை தகனம் செய்ய வேண்டிய தேவை காணப்பட்டது. இதனை அரசியலாக்குவது முற்றிலும் தவறு.

கொரோனா வைரஸ் தாக்கத்தில் இருந்து முஸ்லிம் சமூகம் மாத்திரமல்ல ஒட்டுமொத்த மக்களையும் பாதுகாக்கும் செயற்பாடுகளை முன்னெடுக்காமல் இவர்கள் முஸ்லிம் மக்களை தவறான கோணத்தில் திசைத்திருப்பி விடுகின்றார்கள்.

கொரோனா வைரஸை கட்டுப்படுத்த அரசு எடுக்கும் நடவடிக்கைகளை பலவீனப்படுத்தவே முயற்சிக்கின்றார்கள் – என்றார்.

# சூட்டில் காயமுற்ற இளைஞனை பார்வையிட்டார் கஜேந்திரகுமார்



யாழ்ப்பாணம், மே. 15

பருத்தித்துறை மந்திகை பகுதியில் இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான இளைஞனை வைத்தியசாலைக்குச் சென்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பார்வையிட்டார்

நேற்றுபின்னிரவு 11.50 அளவில் இடம்பெற்ற துப்பாக்கி சூட்டுச் சம்பவத்தில் புலோலியைச் சேர்ந்த பசுபதி அனுசன் (வயது – 22) என்ற இளைஞன், கை மற்றும் காலில் துப்பாக்கி ரவை பாய்ந்த நிலையில் காயமடைந்தார்.

இதனையடுத்து, அந்த இளைஞன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு அண்மையாக கடமையிலீடுபட்டிருந்த இராணுவச் சிப்பாய்கள் மீது, அதிவேகமாகச் சென்ற மோட்டார் சைக்கிளில் இருந்து கல்வீச்சு நடத்தப்பட்டுள்ளது. அந்த மோட்டார் சைக்கிளின் பின்னால் வேகமாக வந்த மோட்டார் சைக்கிளை நிறுத்த சைகை மேற்கொண்டும், நிறுத்தாமல் சென்றதால், துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாக இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

# வாழைச்சேனையில் கிருமி நீக்கம்

கொழும்பு, மே. 15

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையினை கருத்திற் கொண்டு கொரோனா வைரஸ் தொற்றைத் தடுக்கும் நோக்குடன் மக்களின் பாதுகாப்பு கருதி விசேட அதிரடிப் படையினரால் தொற்று நீக்கி விசிறும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது.

அந்தவகையில் வாழைச்சேனை விசேட அதிரடிப் படையினரின் ஏற்பாட்டில் வாழைச்சேனைப் பிரதேசத்திலுள்ள அரச திணைக்களங்கள் மற்றும் மக்கள் நடமாட்டம் காணப்படும் இடங்களில் தொற்று நீக்கி இரசாயனத்திரவம் விசுறும் நடவடிக்கை வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது வாழைச்சேனை மாவட்ட நீதவான் நீதிமன்ற வளாகம், நீதிமன்ற அலுவலகம், வாழைச்சேனை வீதி அபிவிருத்தி அதிகார சபை அலுவலகம், வாழைச்சேனை கமநல சேவை திணைக்களம், பேருந்து தரிப்பு நிலையம், பேருந்துகள், வங்கிகள் உட்பட மக்களின் நடமாட்டம் காணப்படும் இடங்களில் தொற்றுநீக்கி இரசாயனத் திரவம் விசிறப்பட்டது.

வாழைச்சேனை விசேட அதிரடிப் படையின் பொறுப்பதிகாரி ஏ.எஸ்.பிரேமரத்ன வழிகாட்டலில் இராணுவப் பரிசோதகர் எஸ்.எஸ். வி.பன்டார தலைமையிலான விசேட அதிரடிப் படையினர்கள் கலந்து கொண்டு வாழைச் சேனை பிரதேசத்திலுள்ள அரச திணைக் களங்களில் தொற்றுநீக்கி இரசாயனத் திரவம் விசுறப்பட்டது.





# மீண்டும் ஆரம்பத்திலிருந்து முடக்கும் நிலைமை வரலாம்

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாட்டு மக்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு,மே15

**தற்போது ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டு பொது மக்களின் இயல்பு வாழ்க்கை திருப்பப்படும் சூழ்நிலையில், பொது மக்களின் செயல் பாடுகள் அதிருப்தியை ஏற்படுத்திவருகின்றன என தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.**

இந்த நிலையில், மதுபான விற்பனை நிலையங்கள் மற்றும் சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றாத இடங்களில் கொரோனா வைரஸ் தொற்றிய நோயாளிகள் கண்டறியப்பட்டால், கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த இதுவரை நடைமுறைப்படுத்திய வேலைத்திட்டங்களை மீண்டும் முதலில் இருந்து ஆரம்பிக்க வேண்டிய நிலைமை ஏற்படும்.

இது தொடர்பில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் அனில் ஜாசிங்க எச்சரிக்கை விடுத்துள்ளார். அதில் கூறப்பட்டவை வருமாறு :-



மதுபான விற்பனை நிலையங்களுக்கு அருகில் அதிகளவில் மக்கள் கூடுவதை காணமுடிந்தது.

இப்படி மக்கள் கூடும் இடங்களில் கொரோனா நோயாளி அடையாளம் காணப்பட்டால், அந்த நோயாளி ஊடாக நோய் பரவும் விதம் மற்றும் குழுக்களாக நோய் தொற்றியவர்கள் இருக்கும் இடங்களை அடையாளம் காண்பது சிரமமானதாக இருக்கும்.

மதுபான விற்பனை நிலையங்களின் சூழலில் கொரோனா நோயாளி அடையாளம் காணப்பட்டால் நாம் மீண்டும் ஆரம்ப இடத்திற்கு செல்ல வேண்டிய நிலைமை ஏற்படும்.

இந்த நோயாளியுடன் சம்பந்தப்பட்டவர்களை பெரும் எண்ணிக்கையிலானவர்கள் மத்தியில் கண்டறிய நேரிடும். இந்த நபர்கள் பல இடங்களுக்கு பரவிச் சென்றால் நிலைமை மிக மோசமாக மாறும்.

கூடும் மக்களுக்கு மத்தியில் வைரஸ் சிலருக்கு பரவி, அவர்கள் தமது வீடுகளில் இருக்கும் நபர்களுடன் பழகும் போது இறுதியில் கொத்துக் கொத்தாக நோயாளிகளை அடையாளம் காண நேரிடும்.

ஊரடங்குச் சட்டம் மற்றும் சமூக இடைவெளி ஆகியவற்றை அடிப்படையாக கொண்டே இதற்கு முன்னர் நாம் செயற்பட்டோம். இப்படியான நிலைமைகளில் மக்கள் கூட்டமாக கூடுவது குறைவு.

எனினும் தற்போதைய நிலைமை தொடர்ந்தால், நிலைமை கைமீறி செல்லலாம் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.



# வவுனியா விபத்தில் இன்று இரு இளைஞர்கள் படுகாயம்

வவுனியா ரயில் நிலைய வீதியில் இன்று மாலை இடம்பெற்ற விபத்தில் இரு இளைஞர்கள் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த விபத்து தொடர்பாக மேலும் தெரியவருகையில் –

குருமன்காடு பகுதியில் இருந்து ரயில் நிலைய வீதியூடாக பயணித்த மோட்டார் சைக்கிள், எதிரே வந்து கொண்டிருந்த பாரவூர்தியுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையின் விபத்து பிரிவில் அனுமதிக்கப்பட்டனர்.

அவர்களில்ஒருவரின்நிலை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. விபத்துதொடர்பாக வவுனியா போக்குவரத்து பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

காலைக்கதிர் Kalaikathir

சிறுவர் பூங்கா

16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு

தினம் ஒரு தலைப்பு



சித்திரப்போட்டி

நாளைய (16.05.2020) தலைப்பு
சிறுவர் பூங்கா

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலையில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை வீடுகளில் இருந்தே அனுஷ்டியுங்கள்!

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் கோரிக்கை

வவுனியா, மே. 15

முள்ளிவாய்க்கால் நினைவு தினம் மே 18 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள நிலையில் அன்று மக்கள் தங்களது வீடுகளிலேயே இரவு 7 மணிக்கு அனுஸ்டிக்குமாறு வவுனியா மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களது சங்கம் தெரிவித்துள்ளது.

வவுனியாவில் 1183 ஆவது நாளாகப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் இன்று நடத்திய ஊடக சந்திப்பிலேயே அந்தச் சங்கத்தின் வடக்கு – கிழக்கு இணைப்பாளர் கோ. ராஜ்குமார் இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் தெரிவிக்கையில் –

முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தினை யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் கூறியது போல் மே 18 அன்று இரவு 7 மணிக்கு உங்களது வீடுகளில் உள்ள மின்குமிழ்களை அணைத்து அன்றைய தினமானது தமிழர்களுக்கு இருள் சூழ்ந்த நாள் என்பதனை வெளிப்படுத்துங்கள்.

அத்துடன் அன்றைய தினம் மரணித்தவர்களுக்காக ஒளியேற்றி வீடுகளில் அஞ்சலி செலுத்துங்கள். அவ்வாறு நீங்கள் அஞ்சலி செலுத்துவதை புகைப்படம் எடுத்து முகப்புத்தகங்களில் பதிவேற்றிக் கொள்ளுங்கள். அந்தந்தப் பகுதி இளைஞர், யுவதிகள் தமது பகுதிகளில் உள்ள முகப்புத்தக வசதி இல்லாதவர்களின் படங்களையும் பதிவேற்றுங்கள்.

சமூக வலைத்தளங்கள் மூலம் சர்வதேசத்திடம் நீதியைக்கோரும் பொறிமுறையொன்றை நாங்கள் உருவாக்கவேண்டும். அத்துடன் முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தினை மையப்படுத்தி அதனை சித்திரித்து படமொன்றினையும் நாங்கள் அறிமுகம் செய்கின்றோம்.

அதில் நாங்கள் வீழ்ந்த இனமெல்ல வீறுகொண்டு எழும் இனம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அனைவரும் தமிழர்களாக இணைந்து இந்த முள்ளிவாய்க்கால் நினைவுதினத்தினை செய்யவேண்டிய கடமையுள்ளது. எனினும் தமிழர்களுக்கு கிடைக்க வேண்டிய நீதிக்கு எதிராக பணியாற்றியவர்கள் குறிப்பாக தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் இதில் ஈடுபடுவதனையும் நாம் வன்மையாக கண்டிக்கின்றோம் – என்றார்.

## கொரோனா பரவலின் 2 ஆம் அலையை தவிர்ப்பதற்கு நடவடிக்கைகள் அவசியம்



### சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவிப்பு

கொழும்பு, மே. 15

வியட்நாம், தென்கொரியா மற்றும் நியூசிலாந்து போன்ற நாடுகளால் பின்பற்றப்படும் நடைமுறைகளை அமுல்படுத்துவதன் மூலம் கொரோனா வைரஸ் பரவல் இரண்டாம் அலையின் தாக்கத்திற்கு உட்படுவதைத் தவிர்க்க முடியும் என சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:-

கொவிட் – 19 கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்துவதன் ஓரங்கமாக இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புவதும் இ முடக்கப்பட்டிருந்த நாட்டை மீண்டும் பகுதியாகத் திறப்பதும் தற்போது முன்னெடுக்கப்பட வேண்டிய சரியான விடயங்களாகும்.

அதேவேளை, இந்தத் தொற்றுநோயின் இரண்டாவது அலையின் தாக்கத்திற்கு உட்படுவதைத் தவிர்ப்பதும் மிகவும் அவசியமாகும். இவ்விடயத்தில் வியட்நாம் இ தென்கொரியா மற்றும் நியூசிலாந்து போன்ற நாடுகளால் பின்பற்றப்படும் நடைமுறைகளை அமுல்படுத்தலாம்.

அதேபோன்று புத்தாக்க முயற்சிகள் மற்றும் புதிய வரத்தக நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு உதவி பல்வேறு தனியார் நிறுவனங்கள், வங்கிகள் முன்வந்துள்ளமை வரவேற்கத்தக்கதாகும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## அதிகாரிகளுக்கு 5 ஆண்டுகள் வாகனங்கள் வழங்கப்படாதாம்

கொழும்பு, மே. 15

அடுத்த ஐந்து ஆண்டுகளில் அரச அதிகாரிகள் மற்றும் அமைச்சர்களுக்கு எந்தவித வாகனங்களும் வழங்கப்படாது என அமைச்சர் ரமேஷ் பத்தி ரன தெரிவித்துள்ளார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர், கொவிட் – 19 கொரோனா வைரஸ் நிவாரண நிதியாக உலக நாடுகள் எமக்கு வழங்கிய தொகையில் இதுவரை ஒரு டொலரேனும் எமக்குக் கிடைக்கவில்லை. அதேபோல் பாதிக்கப்பட்ட மக்களுக்காக இரண்டு மாதங்களில் 8000 கோடி ரூபாய்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

மக்களின் வாழ்வாதார நிலைமைகளைக் கருத் தில் கொண்டே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் அரச ஊழியர்களின் கொடுப்பனவில் அறவிட அரசு தீர்மானம் எடுத்துள்ளதாக பொய்யாக கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றது.

யார் விரும் புகின்றார்களோ அவர்கள் சுயமாக உதவி செய்ய முடியும்.

அதேபோல் அரசின் தேவைக்காக மூவாயிரம் வாகனங்களை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுப்பதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்துகின்றனர்.

எனினும் அவ்வாறான எந்த நடவடிக்கையும் அரசால் முன்னெடுக்கப்படவில்லை. அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு இப்போது இருக்கும் வளங்களைப் பயன்படுத்தியே அரசு இயங்க வேண்டும் என்ற கொள்கையில் ஜனாதிபதி உறுதியாக உள்ளார்.

இப்போதுள்ள நிலையில் அடுத்த ஐந்து ஆண்டுகளில் அரச அதிகாரிகள் மற்றும் அமைச்சர்களுக்கு எந்தவித வாகனங்களும் வழங்கப்படாது என நாம் நம்புகின்றோம் – என்றார்.

## சிறிதரனிடம் விசாரணை

கிளிநொச்சி, மே. 15

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் மற்றும் கரைச்சிப் பிரதேச சபைத் தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன் ஆகியோரிடம் இன்று கிளிநொச்சி பொலிஸார் வாக்குமூலம் பதிவு செய்தனர்.

இன்று முற்பகல் 10 மணியளவில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டிருந்த இருவரிடமும் பொலிஸார் வாக்குமூலம் பதிவு செய்திருந்தனர்.

தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில் கடந்த மார்ச் மாதம் 8ஆம் திகதி கிளிநொச்சி பசுமைப் பூங்காவில் இடம்பெற்ற மகளிர் தின நிகழ்வில் அன்னை பூபதியின் உருவப்படத்துடன், விடுதலைப்புலிகளின் பெண் மாவீரர்களின் உருவப்படங்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டமை தொடர்பில் கிளிநொச்சியைச் சேர்ந்த ஒருவரால் பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாக இன்று பொலிஸார் விசாரணைக்காக அழைத்திருந்தனர். இந்த நிலையில் இருவரிடமும் கிளிநொச்சி பொலிஸார் வாக்குமூலம் பதிவு செய்திருந்தனர்.

இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் –

குறித்த தினத்தன்று மகளிர் தின நிகழ்வில் தானும், கரைச்சி பிரதேச சபை தவிசாளர், சட்டத்தரணிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். அங்கு அன்னை பூபதியின் திரு உருவ படத்துடன், போராளிகள் சிலரின் படங்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன.

இந்தச் சம்பவம் தொடர்பில் புலனாய்வுப் பிரிவினருடன் இணைந்து செயற்படும் ஒருவர், தனது குடும்பத்தில் போராட்ட காலத்தில் சகோதரர்கள் கொலை செய்யப்பட்டதாகவும், மீண்டும் இளைஞர்களை போராட்டச் சிந்தனைக்குள் அழைத்துச் செல்லும் செயற்பாட்டில் இருவரும் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவித்து முறைப்பாடு ஒன்றை பதிவு செய்திருந்தார்.

அந்த முறைப்பாட்டிற்கு அமைவாக ஏற்கனவே விசாரணைக்கு அழைக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டிருந்தது. அதில் கிடைத்த தகவல்கள் போதாது என தெரிவித்தே இன்று மீண்டும் எம்மை அழைத்து நீண்ட நேரம் வாக்குமூலம் பொலிஸாரால் பெறப்பட்டுள்ளது – என்றார்.

## மாடுகளை கொண்டு சென்றவர் சிக்கினார்

மட்டக்களப்பு, மே. 15

அனுமதிப்பத்திரத்தை மீறிய முறையில் கொண்டு செல்லப்பட்ட மாடுகள், ஏற்றி வந்த வாகனமும் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், ஒரு சந்தேக நபரும்



வியாழக்கிழமை மாலை கைது செய்யப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தனஞ்சய பெரமுன தெரிவித்தார்.

வாழைச்சேனைப் பிரதேசத்தில் இருந்து அட்டாளைச்சேனை பகுதிக்கு நிலையில் அனுமதிப்பத்திரத்தை மீறிய வகையில் மாடுகளை சித்திரவதைக்கு உட்படுத்தும் விதத்தில் கொண்டு செல்லப்பட்ட 16 மாடுகள் மற்றும் ஒரு வாகனமும் கைப்பற்றப்பட்டுள்ளமையுடன், ஒரு சந்தேக நபரும் கைது செய்யப்பட்டுள்ளார் என வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தனஞ்ஜய பெரமுன தெரிவித்தார்.

அனுமதிப்பத்திரத்தை மீறிய வகையில் மாடுகளைச் சித்திரவதைக்கு உட்படுத்தும் விதத்தில் கொண்டு செல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் வாழைச்சேனைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

வாழைச்சேனைப் பொலிஸ் பிரிவில் சட்ட விரோதச் செயற்பாடுகளைப் பிடிப்பதற்கு பொலிஸார் துரித நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர் என வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தனஞ்ஜய பெரமுன மேலும் கூறினார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.05.2020 இல் வெளியிடப்பெற்றது.